## உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டம் - 2022

-----------------------------------------------------------------------------------------------------------------------

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2022 செப்தெம்பர் 09 ஆம் திகதிய 4205-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை மற்றும் 9229-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு, விவசாய அமைச்சு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சு என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதும், நாடு முழுவதும் உள்ள ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதும் இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 74,090.15 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 203.36 மில்லியனானதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2022 செப்தெம்பர் 09 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 பெப்ரவரி 29 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிச் செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலின் பயனாளிகளுக்கு நபரொருவரிற்கு ரூபா 5,000 படி செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் நபரொருவரிற்கு ரூபா 5,000 இற்கும் குறைவான தொகை படி செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பயனாளிகளுக்கான இத்தகைய குறைவான கொடுப்பனவுகளின் தொகை ரூபா 187 மில்லியன் தொகையாகும். | சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலின் கீழ் ஒரு பயனாளிக்கு 2022 செப்தெம்பரில் ரூபா 4,700 தொகையும் 2022 ஒக்தோபரில் ஒரு பயனாளிக்கு ரூபா 3,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 01 இன் கீழ் வழங்கப்பட்ட சமுர்த்தி படிகள் மற்றும் மேலதிக படிகள் (Top Up) தற்போதைய சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவு செய்வது தொடர்பாக, தொடர்புடைய படி பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் தனித்தனியாக வகைப்படுத்தப்படாமல் மொத்த தொகையாக காட்டப்பட்டது. | இணங்கப்பட்டது. | சரியான வகைப்படுத்தலின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவையாக காட்டப்பட்டுள்ள 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத ரூபா 614 மில்லியன் தொகைக்கான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் சமுர்த்தி வங்கிகளில் இருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அது தொடர்பான பட்டியல் இந்த திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பயனாளிகளின் எண்ணிக்கை தொடர்பான பின்னிணைப்புக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 நிதிகளின் பயன்பாடு

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 203.36 மில்லியன் ஆகும், அதில் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஐ.அ.டொலர் 172.12 மில்லியன் நிதியேற்பாடு இருந்தது. எனினும் ரூபா 55,930 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153.7 மில்லியன் மாத்திரமே 2022 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்பட்டிருந்தது, இது 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 84 சதவீதம் மாத்திரமே காணப்பட்டது. | இணங்கப்பட்டது. | குறித்துரைத்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இச் செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய ஐ.அ.டொலர் 200 மில்லியனிற்கு மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியானது தொடர்புடைய செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக ஐ.அ.டொலர் 3 மில்லியன் மானியத்தை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. அந்த மானியத்தில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 212.55 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 0.58 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது, எனினும் அந்த நிதியேற்பாடு நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இத் திணைக்களம் 2022.12.16 இல் ரூபா 212.55 மில்லியன் தொகையான மானிய நிதியைப் பெற்றுள்ளது. எனினும், விவசாய அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சால் செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு வருவதால் 2022 திசெம்பர் 31 இற்கு முன்னர் செயற்பாடுகள் இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக ஐ.அ.டொலர் 22.04 மில்லியனிற்கு சமமான ரூபா 6,000 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா 127.02 மில்லியன் அல்லது ஒதுக்கீட்டில் 2.11 சதவீதம் மாத்திரமே விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளன. ரூபா 5,872.98 மில்லியன் மிகுதித் தொகை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் செலுத்த வேண்டிய மானியங்களாகக் குறிப்பிடப்பட்டது. | இந்த செயற்திட்டத்தின் கீழ், ஏழை மற்றும் பாதிப்படையக்கூடிய குடும்பங்களுக்கான பணப் பரிமாற்றம் மற்றும் விவசாயிகளுக்கான நிதி உதவி என்பன மாத்திரமே 2022 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்டன. | அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஊட்டச்சத்து உணவு மற்றும் பாலூட்டும் பெண்கள் மற்றும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து படி என்பவற்றை வழங்குதல் 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் நிதியளிப்பின் கீழ் செயற்திட்டத்தில் உள்ள செயற்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டன. ரூபா 2,650 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்த செயற்திட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கைகளுக்கு இந்தப் பண ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் அது நி.பி. 66 மூலம் வேறொரு செலவினத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | சமுர்த்தி வங்கியில் கர்ப்பிணித் தாய்மார்களின் புதிய வங்கிக் கணக்கைத் திறப்பதற்காக 2022 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் மீதமுள்ள ஒதுக்கீடு ஏனைய வாக்குப்பணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் வங்கிக் கணக்கை தொடங்குவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, சுற்றறிக்கையின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்காக வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு, கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |